பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
20 06 2025 **FRIDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி, பீகார் மாநிலம் **Siwan-**ல் 5 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

3. மத்திய அரசு மேற்கொண்டுள்ள வங்கி சீர்திருத்தங்கள் உலகிற்கே முன்மாதிரியாக திகழ்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

4. கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரை இன்று தொடங்கியது.

5. ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ருத்துஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>>

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உத்ராகண்ட் மாநிலம். டேராடூனில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தலுக்கான தேசிய நிறுவனத்தில் பயிலும் மாணவர்களிடையே இன்று

**கலந்துரையாடிய குடியரசுத் தலைவர், தற்போதைய யுகம் அறிவியல் – தொழில்நுட்ப யுகமாக உள்ளது என்றார்.**

**இதில் மாற்றுத் திறனாளிகளும் உரிய பங்களிப்பை வழங்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அவர், புதுதில்லி குடியரசுத்தலைவர் மாளிகையில் அமிர்த பூங்காவை பார்வையிட வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.**

**முன்னதாக, டேராடூனில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடியரசுத் தலைவர் இல்லத்தையும் திருமதி. திரௌபதி முர்மு இன்று திறந்து வைத்தார்.**

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பீகார் மாநிலம், **Siwan-**ல் சுமார் 5 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இன்று மாலை நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், பாடலிபுத்திரம் - கோரக்பூர் இடையேயான வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை தொடங்கி வைக்கும் அவர், இம்மாநிலத்தின் **Marhowrah-**வில் அரசு தனியார் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்ட ரயில் எஞ்சின் கினியா நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதையும் தொடங்கி வைக்கிறார்.

இதுதவிர, தூய்மை கங்கை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

பின்னர் ஒடிசா செல்லும் பிரதமர், அம்மாநில பிஜேபி அரசின் முதலாமாண்டு நிறைவு விழாவில் பங்கேற்று, சுமார் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைக்கவுள்ளார்.

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டுள்ள வங்கி சீர்திருத்தங்கள் மற்றும் ஏழைகளுக்கான நிதி சேவைகள், உலகிற்கே முன்மாதிரியாக திகழ்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தாம் அளித்த பேட்டியை சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், இந்த சீர்திருத்தங்கள் அரசின் நடைமுறைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவம் கூறியுள்ளார்.

ஆட்சி நிர்வாகம் தொடர்பான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அணுகுமுறை பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவிகரமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் ஏற்படும் புவி அரசியல் மாற்றங்களால் இந்தியாவின் வளர்ச்சிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் முதல் பத்து பொருளாதார நாடுகளுடன் இந்தியா போட்டியிடுவதால், அதற்கு இணையான தரத்தில் தான் வளர்ச்சி அமையும் என்றும் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் 67வது பிறந்தநாளையொட்டி, தலைவர்கள் பலரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் திருமதி. திரௌபதி முர்முவின் வாழ்க்கையும், அவரது தலைமைப் பண்பும் மக்களுக்கு எப்போதும் ஊக்கமளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

மக்கள் சேவை, சமூகநீதி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அவரது உறுதிப்பாடு, அனைவருக்கும் நம்பிக்கை மற்றும் வலிமையை அளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எளிமையான குடும்பத்தில் பிறந்து நாட்டின் மிக உயரிய பதவியான குடியரசுத்தலைவர் பதவி வரை உயர்ந்த அவரது வாழ்க்கைப் பயணம் அசாதாரணமானது என்று தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், குடியரசுத் தலைவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், மனஅமைதி மற்றும் மகிழ்ச்சியுடனும் நாட்டிற்காக சேவையாற்ற வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்களும் குடியரசுத் தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

சத்திஷ்கட் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, பெண் நக்ஸலைட்டு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இம்மாநிலத்தின் **Kaanker** மாவட்டத்திற்கு உட்பட்ட **Amatola** மற்றும் **Kalpar** கிராமங்களில் உள்ள மலைப்பகுதிகளில், எல்லைப் பாதுகாப்புப் படையினர் மற்றும் மாவட்ட ரிசர்வ் காவல்படையினர் இன்று அதிகாலை கூட்டாக மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது, இருதரப்பினருக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாக மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. **Dinesh Sinha** தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திலிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், அப்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகவும் திரு. தினேஷ் சின்ஹா கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

மும்பையில் மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் நடத்திய சோதனையில் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தில்லியிலிருந்து வந்த பேருந்தில் உணவுப் பொருட்களுடன் மறைத்து வைத்து இந்த பொருட்களை கடத்தி வந்த, நைஜீரியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீது, போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வருவாய் புலனாய்வு துறையினர் தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

கைலாஷ் - மானசரோவர் புனித யாத்திரை இன்று தொடங்கியது.

சிக்கிம் மாநிலத்தில் உள்ள நாதுலா கணவாய் வழியாக 5 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் இந்த யாத்திரையை அம்மாநில ஆளுநர் திரு. ஓம் பிரகாஷ் மாத்தூர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த புனித யாத்திரை, மீண்டும் தொடங்கியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

யாத்திரிகர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் திரு. ஓம் பிரகாஷ் மாத்தூர் தெரிவித்தார்.

நாதுலா கணவாய் வழியாக மொத்தம் பத்து குழுவினர், சீன எல்லையை கடந்து, கைலாஷ் - மானசரோவர் யாத்திரையை மேற்கொள்ளவுள்ளனர்.

**<<<<<<>>>>>>**

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் நடைபெற்று வரும் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் நாள்தோறும் ஆண்-பெண் இருபாலரும் யோகா பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பயிற்சி உடல் ஆரோக்கியத்திற்கு மிகச் சிறந்த பயிற்சியாக திகழ்கிறது என்று யோகா பயிற்சியாளர் திரு. சுந்தரராஜ் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயிற்சியாளர் 30 செகண்ட்ஸ்)

யோகா பயிற்சியை மேற்கொள்வதன் மூலம், மனம் அமைதி பெறுவதுடன் உடல் ஆரோக்கியம் உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் ஏற்படுவதாக பயிற்சியை மேற்கொண்டு வரும் ஜனனி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஜனனி 30 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா — ருதுஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-7, 7-6, 12-10 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் **Maria Marainez – Aleiba Rey** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

ஸ்லோவேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிக்கா பத்ரா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 11-8, 11-5 என்ற செட்கணக்கில் போர்ச்சுகலின் **Fu Yu** —வை வென்றார்.

**<<<<<<>>>>>>**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

லீட்ஸில் இந்திய நேரப்படி பிற்பகல் மணி 3.30க்கு இப்போட்டி தொடங்கவுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது.

**<<<<<<>>>>>>**

**Billi Jean** கிங் கோப்பைக்கான டென்னிஸ் போட்டியின் ப்ளேஆஃப் சுற்று ஆட்டங்கள் வரும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி முதல் 16ஆம் தேதிவரை பெங்களூருவில் நடைபெறும் என்று சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**